புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 PRGI.No.PNTAM/26/A7529 GSTIN: 33KXSPK6994Q1ZX

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com
ஆசிரியர்: K.சபியுல்லா

மலர்: 02 | இதழ்: 95 | 10-10-2026 | சனி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி


Volum 02 | Issue: 95 | 10-10-2026 | Saturday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry


## சிஜேபியின் அக்.10 போராட்டம்:

# டெல்லியில் பாதுகாப்புக்கு 23,000 பேர் குவிப்பு

புதுடெல்லி: அக்.10–

டெல்லி ஜந்தர் மந்தரில் இன்று (அக்.10) போராட்டம் நடத்த கரப்பான்பூச்சி ஜனதா கட்சி அழைப்பு விடுத்துள்ளதை அடுத்து, மாநகரில் பாதுகாப்பு தீவிரப்படுத் தப்பட்டுள்ளது. மேலும், பொதுப் போக்குவரத்துக் கான கட்டுப்பாடுகளை டெல்லி காவல் துறை அதிகரித்துள்ளது.

வினாத்தாள் கசிவுக்கு பொறுப்பேற்று தர்மேந்திர பிரதான் பதவி விலக வலியுறுத்தி டெல்லி ஜந்தர் மந்தரில் சிஜேபி கடந்த ஜூலை மாதம் போராட்டம் நடத்தியது. போராட்டம் தீவிரமடைந்ததன் காரணமாக மத்திய கல்வி அமைச்சர் பதவியில் இருந்து தர்மேந்திர பிரதான் பதவி விலகினார்.

இதேபோல், தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வலியுறுத்தி டெல்லி ஜந்தர் மந்தரில் நாளை போராட்டம் நடத்த கரப்பான்பூச்சி ஜனதா கட்சியும் (சிஜேபி), சிபிஐ (எம்எல்)ன் மாணவர் அமைப்பான ஏஐஎஸ்ஏவும் இணைந்து அழைப்பு விடுத்துள்ளன.

மேலும், இந்த போராட்டத்துக்கு பாரதிய கிசான் சங்கம் எனும் விவசாயிகள் அமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளது. எதிர்க்கட்சிகளின் ஆதரவும் இந்தப் போராட்டத்துக்கு இருக்கும் என்பதால், டெல்லியில் பரபரப்பு அதிகரித்துள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு டெல்லி காவல் துறை அனுமதி அளிக்கவில்லை. மேலும், ஜந்தர் மந்தரில் போராட்டம் நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. தடையை மீறி போராட்டம் நடத்த முயல்பவர்களை கைது செய்ய காவல்துறை திட்டமிட்டுள்ளது. இதற்காக, மத்திய ஆயுதக் காவல் படைகளின் 221 படைப் பிரிவுகளைச் சேர்ந்த 23,000 வீரர்கள் களமிறக்கப் பட்டுள்ளனர். இதற்கான நடவடிக்கையை மத்திய உள்துறை அமைச்சகம் எடுத்துள்ளது. இவர்கள், டெல்லி போலீஸாரோடு இணைந்து பணியாற்ற உள்ளனர்.

அதோடு, போராட்டக் களத்துக்கு வருபவர்களை வழியிலேயே தடுத்து நிறுத்தி அவர்களை தடுப்பு மையங்களுக்குக் கொண்டு செல்வதற்காக 10 தற்காலிக தடுப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

டெல்லிக்கு வெளியில் இருந்து போராட்டக்காரர்கள் டெல்லிக்குள் நுழைவதைத் தடுக்கும் நோக்கில், பொதுப்போக்குவரத்து கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. ரயில் சேவைகளை குறிப்பிட்ட நேரத்துக்கு நிறுத்த அல்லது குறைக்கவும், ஓலா, உபெர் போன்ற செயலி வழி இயங்கும் டாகஸிகளின் இயக்கத்தை கட்டுப்படுத்தவும் காவல்துறை அறிவுறுத்தல்களை வழங்கி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

மேலும், ஹோட்டல்கள், விருந்தினர் இல்லங்கள் உள்ளிட்ட தங்கும் இடங்கள் குறிப்பிட்ட காலத்துக்கு மூடப்பட்டிருக்க வேண்டும் அல்லது புதிய முன்பதிவுகளை நிறுத்த வேண்டும் என்று டெல்லி காவல் துறை அறிவுறுத்தியுள்ளது. மதுபானக் கடைகள் இன்றும் நாளையும் மூடப்பட டெல்லி அரசு உத்தரவிட்டுள்ளது. தேவையைப் பொருத்து இணையக் கட்டுப்பாடுகளும் விதிக்கப் படலாம் என கூறப்படுகிறது. போராட்டம் நடைபெறாமல் தடுப்பதற்குத் தேவையான பல்வேறு நடவடிக்கைகளை காவல் துறை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், டெல்லி காவல் துறையின் இந்த நடவடிக்கைக்கு சிஜேபி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது குறித்து சிஜேபி இணை ஒருங்கிணைப்பாளர் ஆசுதோஷ் ரங்கா, தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “மேலிட உத்தரவின்படியே நீங்கள் (டெல்லி காவல் துறை) இவ்வாறு செயல்படுகிறீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால், நமது குழந்தைகளின் மீது தாக்குதல் நடத்த எப்படி உங்களால் முடிகிறது?

நீங்கள் என்ன செய்தாலும் நாங்கள் நாளை ஜந்தர் மந்தரை நிச்சயம் சென்றடைவோம். நாட்டைக் காப்பதற்கான அந்த வரலாற்றுச் சிறப்புமிக்கப் போராட்டத்தை நாங்கள் முன்னெடுப்போம். வரலாறு உங்களை எவ்வாறு மதிப்பிடும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்” என தெரிவித்துள்ளார்.

# மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில் த.வெ.க. அபார வெற்றி!...



சென்னை. அக்.10–

“மதுராந்தகம் தொகுதியில் மரகதம் குமரவேலும், தாராபுரம் தொகுதியில் சத்யபாமாவும் வெற்றி பெற்றுள்ளனர். இரு தொகுதிகளிலும் தி.மு.க. வேட்பாளர்களை விட அதிக வாக்குகள் பெற்று த.வெ.க. வேட்பாளர்கள் அபார வெற்றி பெற்றுள்ளனர். 27 வேட்பாளர்கள் போட்டியிட்ட மதுராந்தகம்மதுராந்தகம் சட்டப்பேரவைத் தொகுதியில் த.வெ.க. சார்பில் மரகதம் குமரவேல், தி.மு.க. சார்பில் பரந்தாமன், அ.தி.மு.க. சார்பில் கணிதா சம்பத், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சுகந்தி, நாம் தமிழர் கட்சி சார்பில் ஜானகிராமன் உள்ளிட்ட 27 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இந்தத் தொகுதியில் மொத்தம் 2,13,788 வாக்காளர்கள் உள்ள நிலையில், 1,84,413 பேர் வாக்களித்தனர். இதன் மூலம் 86.26 சதவீத வாக்குகள் பதிவாகின. பதிவான வாக்குகள் 21 சுற்றுகளாக எண்ணப்பட்டன. மதுராந்தகத்தில் 20,302 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிவாக்கு எண்ணிக்கையின் முடிவில் த.வெ.க. வேட்பாளர் மரகதம் குமரவேல் 72,103 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் பரந்தாமன் 51,801 வாக்குகள் பெற்றார். இதனால் மரகதம் குமரவேல் 20,302 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அ.தி.மு.க. வேட்பாளர் கணிதா சம்பத் 46,034 வாக்குகள் பெற்றார். நாம் தமிழர் கட்சி 2,083 வாக்குகளையும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 1,506 வாக்குகளையும் பெற்றன. தாராபுரத்திலும் த.வெ.க. வேட்பாளர் வெற்றிதாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதியில் த.வெ.க. சார்பில் சத்யபாமா, தி.மு.க. சார்பில் சுகன்யா, அ.தி.மு.க. சார்பில் பானுமதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் லட்சுமணன், நாம் தமிழர் கட்சி சார்பில் கார்த்திகா உள்ளிட்ட 22 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இந்தத் தொகுதியில் மொத்தம் 2,23,306 வாக்காளர்களில் 1,79,314 பேர் வாக்களித்தனர். இதன் மூலம் 80.30 சதவீத வாக்குகள் பதிவாகின. பதிவான வாக்குகள் 23 சுற்றுகளாக எண்ணப்பட்டன. 9471 வாக்குகள் வித்தியாசத்தில் சத்யபாமா வெற்றிதாராபுரம் தொகுதியில் த.வெ.க. வேட்பாளர் சத்யபாமா 66841 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். தி.மு.க. வேட்பாளர் சுகன்யா 57370 வாக்குகள் பெற்றார். இதன் மூலம் சத்யபாமா 9471 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அ.தி.மு.க. வேட்பாளர் பானுமதி 45280 வாக்குகள் பெற்றார். நாம் தமிழர் கட்சி 5268 வாக்குகளையும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 1157 வாக்குகளையும் பெற்றன. தொண்டர்கள் உற்சாகக் கொண்டாட்டம்மதுராந்தகம், தாராபுரம் ஆகிய இரு தொகுதிகளிலும் த.வெ.க. வேட்பாளர்கள் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, அக்கட்சித் தொண்டர்கள் உற்சாகமாகக் கொண்டாடினர்.

இந்த இடைத்தேர்தல் வெற்றி குறித்து கருத்து தெரிவித்த அமைச்சர்கள், கடந்த 4 மாத கால ஆட்சிக்குக் கிடைத்த வெற்றி எனக் கூறி வருகின்றனர்..

## அரசு பேருந்தில் அவமதிக்கப்பட்ட ஈரோடு செய்தியாளர்..

# அரசு வழங்கிய இலவச பஸ் பாசில் பயணித்த போது ஓசி கிராக்கி என ஒருமையில் பேசியதை கண்டித்து செய்தியாளர்கள் ஆர்ப்பாட்டம்..

ஈரோடு. அக். 10

அரசு பேருந்தில் செய்தியாளர்களுக்கு வழங்கிய இலவச பேருந்து அட்டையை பயன்படுத்தி பயணம் செய்த ஈரோடு செய்தியாளரை அந்த பேருந்து நடத்துனர் ஓசி கிராக்கிய என அவமதித்து பேசியதை கண்டித்து ஈரோட்டில் செய்தியாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.






ஈரோட்டைச் சேர்ந்த ஒரு தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தில் பணியாற்றி வரும் ரமேஷ்(40) என்பவர் தனது குடும்பத்தினருடன் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்கு சாமி தரிசனம் செய்ய சென்று விட்டு, மதுரையில் இருந்து ஈரோட்டிற்கு அரசு போக்குவரத்து கழகத்திற்கு சொந்தமான பேருந்தில் பயணம் செய்துள்ளார்.

இரவு நேர பயணம் என்பதால் தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் அமர்ந்து பயணித்துள்ளார்.

மனைவி மற்றும் குழந்தைகளுக்கு பேருந்தில் பயண சீட்டை பெற்றுக்கொண்ட அவர் தனக்கான பயண சீட்டுக்கு பதிலாக, தமிழ்நாடு அரசு வழங்கியுள்ள செய்தியாளர்களுக்கான இலவச பேருந்து பயண அட்டையை எடுத்து சம்பந்தப்பட்ட அந்த பேருந்தின் நடத்தினரிடம் கொடுத்துள்ளார். அதனை வாங்கிப் பார்த்த சுந்தரம் என்ற அந்த நடத்துனர், செய்தியாளர்களுக்கு அரசு வழங்கியுள்ள இலவச பேருந்து பயண அட்டை குறித்த எந்த ஒரு புரிதலும் இல்லாமல், இப்படி உங்களுக்கு பேருந்தில் இலவசமாக பயணம் செய்ய எப்படி பாஸ் கொடுத்துள்ளார்கள், உங்களுக்கு இதனை யார் கொடுத்தார்கள், நீங்கள் எந்த செய்தியாளர், முதலில் நீங்கள் செய்தியாளர் தானா என்று அந்த அரசு பேருந்து நடத்துனர் சுந்தரம் என்பவர் அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பி உள்ளார்.

தனது மனைவி மற்றும் குழந்தைகள் கண் முன்னே ஒரு நடத்துனர் தனக்கு வழங்கப்பட்டுள்ள இலவச பேருந்து அடையாள அட்டையை ஏற்க மறுத்து அடுக்கடுக்கான கேள்வி கேட்டதால் சற்று மனதளவில் மன உளைச்சலுக்கு ஆளான செய்தியாளர் ரமேஷ் தனது தரப்பு விளக்கத் கூறி செய்தியாளருக்கான அடையாள அட்டையையும் காட்டியுள்ளார்.

செய்தியாளர் என்பவர் யார் என்று ஒரு புரிதல் இல்லாத அந்த நடத்துனர் சுந்தரம் இது பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது நீ முடிந்தால் டிக்கெட் எடுத்துக்கொள் இல்லையென்றால் பின்னாடி கடைசி இருக்கையில் போய் உட்கார்ந்து கொள் நான் எனது மேலதிகாரிகளிடம் பேசிவிட்டு வருகிறேன் என அகற்றலாக கூறியுள்ளார்.

இதனால் மேலும் அவமதிப்பிற்குள்ளான செய்தியாளர் ரமேஷ் தன் மனைவி, குழந்தைகள் முன்னிலையில் தனக்கு ஏற்பட்ட அவமதிப்பை எண்ணி மனம் வருத்தம் அடைந்து அந்த நடத்துனரிடம் இரவு நேரமாக உள்ளது எனது மனைவியும் குழந்தைகளும் நான் பின்புறம் சென்று விட்டால் தனியாக இருப்பார்கள் என்று எடுத்துக் கூறியுள்ளார்.

இருப்பினும் அடாவடித்தனமாக நீ பின்னால் போய் அமர்ந்து கொள் என்று மிரட்டும் துணியில் பேசி உள்ளார் அந்த அரசு பேருந்து நடத்துனர் சுந்தரம்.

இதன் பிறகு தான் அமர்ந்திருந்த இருக்கையில் இருந்து எழுந்து மனைவி, குழந்தைகள் அருகில் நின்று கொண்டே பயணித்துள்ளார் செய்தியாளர் ரமேஷ்.

இதனைத் தொடர்ந்து ஈரோடு வந்த அவர் சக செய்தியாளர்கள் மத்தியிலும், செய்தியாளர்கள் சங்க நிர்வாகிகளிடமும் தனக்கு அரசு பேருந்தில் நடந்த அவமதிப்பை எடுத்துக் கூறியுள்ளார்.

வந்து ஈரோடு மாவட்ட செய்தியாளர்கள் ஒன்று திரண்டு ஈரோடு ஆட்சியர் மற்றும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஆகியோரிடம் இது குறித்து புகார் தெரிவித்துள்ளனர்.

மேலும் ஈரோடு துணை காவல் கண்காணிப்பாளர் இடமும் நடந்த சம்பவம் குறித்து செய்தியாளர்கள் விளக்கம் அளித்துள்ளனர்.

இதற்கு இடையே இரவு நேரத்தில் அரசு பேருந்தில் பயணம் செய்து தனது குடும்பத்தினர் முன்னிலையில் அவமதிக்கப்பட்ட ரமேஷ் அமைதியான முறையில் அந்தப் பேருந்தில் பயணித்து வந்த நிலையிலும் ஈரோடு அருகே உள்ள மலையம்பாளையம் காவல் நிலையத்தில் பேருந்து நிறுத்தி நடத்துனர் சுந்தரம் அங்கிருந்த காவலர்களிடம் செய்தியாளர் ரமேஷ் குறித்து புகார் தெரிவித்த நிலையில் அந்த காவலர்களும் பேருந்துக்குள் சென்று செய்தியாளர் ரமேஷை மிரட்டியதாகவும் தெரிகிறது.

இதற்காக அந்தக் காவலர்களுக்கு விளக்கம் கேட்டு காவல்துறை கடிதம் கொடுத்துள்ளதாகவும் தெரிகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தின மாலை ஐந்து முப்பது மணி அளவில், அரசு பேருந்தில் செய்தியாளர் ரமேஷ் அவமதிக்கப்பட்டதை கண்டித்து சுமார் 50க்கும் மேற்பட்ட செய்தியாளர்கள் ஒன்று திரண்டு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

மேலும் ஈரோடு மாவட்ட நிர்வாகமும், செய்தி துறையும் சம்பந்தப்பட்ட நடத்துனர் சுந்தரத்தை பணியிடை நீக்கம் செய்து செய்தியாளர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க கோரி திங்கள் கிழமை காலை முதல் செய்தி துறை அலுவலகத்தில் உள்ளிருப்பு போராட்டம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தசம்பவம்செய்தியாளர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# அரசு கல்லூரி மற்றும் புதுக்கோட்டை சமூக நலத்துறை இணைந்து நடத்திய மூத்த குடிமக்கள் விழிப்புணர்வு போட்டிகள் பரிசளிப்பு விழா

அறந்தாங்கி அக்,10

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோயில் அருகே பெருநாவலூரில் இயங்கி வரும் அறந்தாங்கி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டமும், புதுக்கோட்டை மாவட்ட சமூக நலத்துறையும் இணைந்து நடத்திய மூத்த குடிமக்கள் நலன் குறித்த விழிப்புணர்வு வினாடி வினா, நடனம் மற்றும் மூத்த குடி மக்களின் பெருமை மிகு நடைப்போட்டிகளும், வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் கல்லூரி திருவள்ளுவர் அரங்கத்தில் நடைபெற்றன.



கல்லூரி முதல்வர் முனைவர் ரா.சரளா தலைமை தாங்கிப் போட்டிகளைத் தொடங்கி வைத்தார்.

தமிழ்த்துறைத்தலைவர் முனைவர் கா.காளிதாஸ், வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் கு.சீனிவாசன், கல்லூரிக் கண்காணிப்பாளர் பா. மகாராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வினாடி வினா போட்டியை நுண்கலை ஒருங்கிணைப்பாளர் முனைவர் ச.கணேஷ்குமார் நிகழ்த்தினார். நடுவர்களாக நிர்வாகவியல் துறைத்தலைவர் முனைவர் மு. அன்பழகன், இயற்பியல் துறைத்தலைவர் முனைவர் ஏ டேவிட் கலைமணி ராஜ், வரலாற்றுத்துறைத்தலைவர் முனைவர் ரா. பிரகதாம்பாள் ஆகியோர் பணியாற்றினர்.

புதுக்கோட்டை பரத நாட்டிய ஆசிரியை ரா. மதுபாலா, இயற்கை விவசாய ஆலோசகர் நிஷா மைதீன், கைவினைப் பயிற்றுநர் சே. நான்சி ராணி, யோகா பயிற்சியாளர் த.மனோகர், அறந்தாங்கி குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் ஆ.வசந்தி ஆகியோர் துறை சார்ந்த கருத்துரை வழங்கினர்.

தொடர்ந்து ஆவுடையார் கோயில் அன்பாலயத்திலிருந்து வருகை தந்த மூத்த குடிமக்களுடன் மாணவ, மாணவியர் நடத்திய பெருமை மிகு நடைப்போட்டியும் சிறப்பாக நடைபெற்றது.

நிறைவாக நடைபெற்ற நடனப்போட்டிக்கு நடுவர்களாக வேதியியல் துறைத்தலைவர் து. சிற்றரசு, கணினி அறிவியல் துறை விரிவுரையாளர் ப.செந்தில்குமார், தமிழ்த்துறை விரிவுரையாளர் ரா.ராஜலட்சுமி ஆகியோர் நடுவர்களாகப் பணியாற்றினர்.

போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு அறந்தாங்கி வருவாய்க்கோட்டாட்சியர் இ.அபிநயா , புதுக்கோட்டை மாவட்ட மகளிர் அதிகார மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் சை.ஹசீனா பானு ஆகியோர் பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கிச் சிறப்புரை ஆற்றினர்.

முன்னதாக கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் மு . பழனித்துரை வரவேற்றார். புதுக்கோட்டை சமூக நலத்துறை பாலியல் சிறப்பு வல்லுநர் து.நந்தினி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கி நன்றி கூறினார்.

போட்டிகள் மற்றும் பரிசளிப்பு விழா ஏற்பாடுகளைக் கல்லூரி அலுவலகப்பணியாளர்கள், சமூக நலத்துறை ஊழியர்கள் மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட தன்னார்வ மாணவ, மாணவியர் செய்திருந்தனர்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தேசிய காசநோய் ஒழிப்பு திட்டம் சார்பாக காசநோய் இல்லாஇந்தியா இயக்கத்தின் நோக்கத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்வது குறித்த உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார், கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்தன் ஆகியோர் தலைமையில் காசநோய் தடுப்பு மற்றும் ஒழிப்பு பணியாளர்கள், சுகாதாரத்துறை அலுவலர்கள் மற்றும் தொடர்புடைய துறை பணியாரள்கள் எடுத்துக் கொண்டனர்.

# தமிழ்நாடு வியாபாரிகள் சங்கப் பேரவை சார்பில் ஆர்ப்பாட்டம்

கோவை அக்:10

கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு வியாபாரிகள் சங்கப் பேரவை மாநிலத் தலைவர் முத்துகுமார் தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைப்பெற்றது.இதில் கோவை மண்டலத் தலைவர்

ப.சுதர்சன் உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில், ஆன்லைன் ஹிறிமி பணப் பரிவர்த்தனைகளுக்கு கூடுதல் வரி விதிக்கப்பட்டால், சிறு,குறு மற்றும் நடுத்தர வணிகர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பு வியாபாரிகளும் பாதிக்கப்படும் நிலை ஏற்படும் என வலியுறுத்தப்பட்டது.



என வே வணிகர்களின் நலன் மற்றும் வணிகச் செயல்பாடுகளை கருத்தில் கொண்டு, UPI பரிவர்த்தனைக்கு வரி விதிக்கும் நடவடிக்கையை மத்திய அரசு கைவிட வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில துணைத்தலைவர் தங்கசாமி, திருவேல் முருகன், மாநில செயலாளர் வேதநாயகம், கிழக்கு மாவட்ட தலைவர் ஜெபத்துரை, கிழக்கு மாவட்ட நிர்வாகிகளும் மேற்கு மாவட்ட தலைவர் ஜெயமுருகன் ,தலைமையில் மேற்கு மாவட்ட நிர்வாகிகளும் வடக்கு மாவட்ட தலைவர் கிஷோர் தலைமையில் வடக்கு மாவட்ட நிர்வாகிகளும் தெற்கு மாவட்ட தலைவர் சேர்மகனி தலைமையில் தெற்கு மாவட்ட நிர்வாகிகளும் திருப்பூர் மாவட்ட தலைவர் ஆத்திச்செல்வன் தலைமையில் திருப்பூர் மாவட்ட நிர்வாகிகளும் மற்றும் மாநில மண்டல மாவட்ட ஒன்றிய கிளை நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கோவை கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த மாநில, மண்டல, மாவட்ட, ஒன்றிய மற்றும் கிளை நிர்வாகிகள், சங்க உறுப்பினர்கள் மற்றும் ஏராளமான வியாபாரிகள் திரளாக கலந்து கொண்டனர்.

## 12 ஆண்டு கால கோரிக்கைக்கு தீர்வு!

# கொண்டனூர் தடுப்பணை தூர்வார நடவடிக்கை

## கனிமொழி சந்தோஷ் எம்.எல்.ஏ., நடவடிக்கை

கோவை: அக்.10

கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பெரிய நாயக்கன்பாளையம் ஒன்றியம், 24 வீரபாண்டி ஊராட்சியில் உள்ள ஆனைகட்டி– கொண்டனூர் கிராமத்தில் அமைந்துள்ள தடுப்பணையை தூர்வார வேண்டும் என்ற பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் 12 ஆண்டு கால கோரிக்கைக்கு தற்போது தீர்வு காணப்பட்டுள்ளது.



கொண்டனூர் கிராமத்தில் க.ச. எண் 723ல் அமைந்துள்ள இந்த தடுப்பணை, 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு முக்கிய நீராதாரமாக இருந்து வருகிறது.

கடந்த 12 ஆண்டுகளாக முறையான பராமரிப்பு மற்றும் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படாததால், தடுப்பணையில் அதிகளவில் வண்டல் மண் தேங்கி, நீர்த்தேக்க திறன் பாதிக்கப்பட்டிருந்தது. இதனால் மழைநீரை சேமிக்க முடியாத நிலை ஏற்பட்டதுடன், விவசாயம், கால்நடைகள் மற்றும் வனவிலங்குகளுக்கான நீர் தேவையும் பாதிக்கப்பட்டது.

விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையை தொடர்ந்து, தடுப்பணையை தூர்வாரி அதன் நீர்த்தேக்க திறனை மீட்டெடுக்க தேவையான நடவடிக்கைகளை கனிமொழி சந்தோஷ் எம்.எல்.ஏ., மேற்கொண்டுள்ளார்.

தடுப்பணை தூர்வாரப்படுவதன் மூலம் மழைக்காலங்களில் நீரை சேமித்து வைக்கவும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தவும் வாய்ப்பு ஏற்படும். இதன் மூலம் விவசாயிகள் மட்டுமின்றி கால்நடைகள் மற்றும் வனவிலங்குகளுக்கும் நீர் ஆதாரம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

12 ஆண்டுகளாக நீடித்து வந்த கோரிக்கைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதற்கு கொண்டனூர் பகுதி விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கனிமொழி சந்தோஷ் எம்.எல்.ஏ.,வுக்கு நன்றி தெரிவித்து வருகின்றனர்.

## ஆயுதபூஜை, நவராத்திரி, மற்றும் தீபாவளியை முன்னிட்டு கார்ஸ் 327 சார்பில் 2வது மாபேரும் யூஸ்ட் கார் சேல் மேளா!

கோவை,அக்.10

கோவையில் கார்ஸ் 327 சார்பாக நடைபெற்று நிறைவுபெற்ற முதல் யூஸ்ட் கார் சேல்மேளா,மாபெரும் வெற்றி பெற்றது.கார்ஸ் 327 சார்பாக, வரும் 9 ம் தேதி முதல், 18ம் தேதி வரை,10 நாட்களுக்கு கோவை நீலாம்பூர் பைபாஸ் சாலையில் உள்ள கார்ஸ் 327



நிறுவன வளாகத்தில்,2வது மாபெரும் யூஸ்டு கார் சேல் மாநாடு நடைபெற உள்ளது.

இது குறித்த செய்தியாளர் களை சந்தித்து பேசிய கார்ஸ் 327 நிறுவன உரிமையாளர் விஷ்ணு வேணுகோபால் கூறியதாவது: கடந்த முறை நடத்தபட்ட,யூஸ்டு கார்ஸ் மேளாவில் 130 கார்கள் விற்பனை செய்துள்ளோம். அதில் 100கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் எதிர் பார்த்த கார்கள் கிடைக்காத தால்,பல வாடிக்கையாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பி னர். அவர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இந்த நவராத்திரி ஆயுதபூஜை,தீபாவளிக்கான,கார்ஸ் மேளா நடத்த பட திட்டமிட் டுள்ளோம்.

இந்த யூஸ்டு கார் மேளா வில் சுமார் 500க்கும் மேற்பட்ட கார்களை கண்காட்சி யில் காட்சி படுத்த பட உள்ளதாகவும்,இதில் குறைந்த பட்சமாக 1லட்சம் முதல் கார்கள் வாடிக்கையாளர்களுக்காக விற் பனைக்கு உள்ளது.மேலும் வாடிக்கையாளர்கள் கார் களை எடுத்து செல்ல கார் மெக்கானிக்,கார் துறைகளை சார்ந்தவர்கள் அழைத்து அவர்களின் மூலமாக ஆய்வு செய்து கார்களை எடுத்து செல்லுங்கள் என்றார்.

வாடிக்கையாளர்கள் முழு திருப்தி அடைந்தால் மட்டுமே அவர்களுக்கு கார்களை விற்பனை செய்வதாக வும்,நிறுவனத்தின் மூலதனமே நம்பிக்கை அதனை காப்பாற்ற நமது நிறுவனம் எப்பொழுதும் வாடிக்கை யாளர்களுடன் துணை நிற்க்கும் என்றார்.

# ஊத்தங்கரை சார்பு நீதிமன்றத்தில் நிலத்தகராறு வழக்கில் 2 பேருக்கு 5 ஆண்டு சிறை

கிருஷ்ணகிரி. அக்.10–

கிருஷ்ணகிரி மாவட்டம், நாகரசம்பட்டி காவல் சரகம், வேலம்பட்டியில் கருணாநிதி என்பவருக்கு சொந்தமாக 8 சென்ட் நிலம் உள்ளது. அந்த நிலத்தின் வழியாக கிருஷ்ணன் என்பவர் பொது வழிப்பாதை உள்ளதாகவும், நிலத்திற்கு பைப் லைன் எடுப்பது சம்பந்தமாகவும் கடந்த 2022ம் ஆண்டு இரு தரப்பினருக்கும் கைகலப்பு ஏற்பட்டது.

இதுதொடர்பாக இருதரப்பு புகார் மனுக்களின் அடிப்படையில் நாகரசம்பட்டி காவல் நிலையத்தில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, ஊத்தங்கரை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்தது.

முதல் வழக்கு: CR.No.90/2022, IPC 147, 148, 341, 323, 324, 307 பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டது.

புகார்தாரர் கிருஷ்ணன், 80, S/o வெங்கட்ராம கவுண்டர், வேலம்பட்டி Vill, போச்சம்பள்ளி TK, TK வன்னியர்.

எதிரிகள் முனியம்மாள், 41, W/o திருப்பதி; கருணாநிதி, 55, S/o ராமசாமி; பார்வதி, 45, W/o கருணாநிதி; பழனி, 56, S/o மாணிக்கம்; மாது, 45,S/o ராமசாமி; ராணி, 35, W/o மாது, வேலம்பட்டி Vill Po, போச்சம்பள்ளி T.K. இவர்கள் அனைவரும் விஙிசி வன்னியர்.





இந்த வழக்கில் A2 கருணாநிதி, 55, S/o ராமசாமி என்பவருக்கு 5 ஆண்டு சிறை தண்டனையும், ரூ.2,000 அபராதமும் விதிக்கப் பட்டது.

இரண்டாவது வழக்கு: CR.No.91/2022, IPC 147, 148, 341, 323, 324, 307 @ 147, 148, 294(b), 323, 324, 325 IPC பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டது. CC.No.198/2022 Dt 22/09/2022.

புகார்தாரர் ராஜேஷ்வரி, 36, W/o கருணாநிதி, வேலம்பட்டி Vill, போச்சம்பள்ளி Po, MBC வன்னியர்.

எதிரிகள் சரசு, 72, W/o கிருஷ்ணன்; கவிதா, 42, W/o ரகுபதி; ரமணி, 30, W/o ராஜ்குமார்; ரகுபதி, 45, S/o திருப்பதி; ராஜ்குமார், 35, S/o கிருஷ்ணன்; விஜயகுமார், 40, S/o கிருஷ்ணன்; பழனி, 36, S/o திருப்பதி, செலப்சனாம்பட்டி Vil, பாலே குளி Po, போச்சம்பள்ளி. இவர்கள் அனைவரும் MBC வன்னியர். இந்த வழக்கில் கி5 ராஜ்குமார், 35, S/o கிருஷ்ணன் என்பவருக்கு 5 ஆண்டு சிறை தண்டனையும், ரூ.2,000 அபராதமும் விதிக்கப் பட்டது.

கருணாநிதி மற்றும் ராஜ்குமார் இருவரையும் சேலம் மத்திய சிறையில் அடைத்தனர்.

## தமிழ்நாட்டில் ஐஏஎஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவு

தமிழ்நாடு உள்துறை செயலாளர் மணிவாசனை இடமாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவு அளித்துள்ளது. சிட்கோ நிர்வாக இயக்குனராக இருந்த கார்த்திக் ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு உள்துறை செயலாளராக நியமனம். தமிழ்நாடு செய்திகள்

மின்வாரிய நிர்வாக இயக்குநர் அருண் ராய், நிதித்துறை செலவினங்கள் பிரிவு செயலாளராக நியமனம்; நிதித்துறை செலவினங்கள் பிரிவு செயலாளர் வெங்கடேஷ், வேளாண் துறை செயலாளராக நியமனம்; நிலநிர்வாக ஆணையராக இருந்த ராஜேஷ் லக்கானி, மின்வாரிய நிர்வாக இயக்குநராக நியமனம். மின் உற்பத்திக் கழக தலைவராகவும் இவர் செயல்படுவார்

ஆவடி மாநகராட்சி ஆணையர் சரண்யா தாம்பரம் மாநகராட்சி ஆணையராக நியமனம். செய்யாறு சார் ஆட்சியர் அம்பிகா ஜெயின், ஆவடி மாநகராட்சியின் ஆணையராக நியமனம்; குடிநீர் வடிகால் வாரிய இணை நிர்வாக இயக்குநரான சிவகிருஷ்ண மூர்த்தி, தேனி மாவட்ட ஆட்சியராக நியமனம்; தேனி ஆட்சியர் வைத்தியநாதன், குடிநீர் வடிகால் வாரிய இணை நிர்வாக இயக்குநராக நியமனம்

## திருவண்ணாமலை அருகே கிணற்றில் சடலமாக மீட்கப்பட்ட 17 வயது கல்லூரி மாணவி: உறவினர்கள் சாலை மறியல்

திருவண்ணாமலை: அக்.10–

செய்யாறு அருகே 17 வயது கல்லூரி மாணவி கிணற்றில் சடலமாக மீட்கப்பட்ட இறப்பில் சந்தேகம் இருப்பதாக உறவினர்கள் 50க்கும் மேற்பட்டோர் சாலை மறியல் ஈடுபட்டனர். செய்யாறு ஆற்காடு சாலையில் மறியலில் ஈடுபட்டவர்களுக்கும் போலீசாருக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

# போச்சம்பள்ளியில் இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டி கிளைக் கூட்டம் பல்வேறு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றம்!



கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி:

இந்தியன் ரெட் கிராஸ் சொசைட்டியின் (IRCS) போச்சம்பள்ளி கிளையின் 2026 அக்டோபர் மாதத்திற்கான முதல் கூட்டம் நேற்று மாலை 5 மணியளவில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு போச்சம்பள்ளி வட்டாட்சியர் பெ. மோகன் தலைமை தாங்கினார். போச்சம்பள்ளி கிளைத் தலைவர் (சேர்மேன்) R. திருநாவுக்கரசு மற்றும் துணைத் தலைவர் தாமரைச்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிருஷ்ணகிரி மாவட்டச் செயலாளர் N. செந்தில்குமார் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார்.

இக்கூட்டத்தில் போச்சம்பள்ளி கிளை உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு தங்களது ஆலோசனைகளை வழங்கினர். கூட்டத்தின் முடிவில், போச்சம்பள்ளி கிளையின் நிதி நடைமுறைகளுக்காகப் புதிய வங்கிக் கணக்கு தொடங்குதல், ரெட் கிராஸ் அமைப்பின் சேவைகளை விரிவுபடுத்தும் நோக்கில் போச்சம்பள்ளி பகுதியில் புதிய உறுப்பினர்களை அதிக அளவில் சேர்த்தல், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தகுந்த மருத்துவர்களைக் கொண்டு விரைவில் பொது மருத்துவ முகாம் நடத்துதல் ஆகிய தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

மேலும், கிருஷ்ணகிரியில் நேற்று (09.10.2026) மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் நடத்தவுள்ள மாரத்தான் போட்டியில் போச்சம்பள்ளி கிளை ரெட் கிராஸ் தன்னார்வலர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு சிறப்பிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளைப் போச்சம்பள்ளி கிளைச் செயலாளர் கி. சசிகலா செய்திருந்தார்.

# மாநில அளவிலான பேச்சுப் போட்டியில் புதுச்சேரி மைய மாணவர் வெற்றி பெற்றார்!

புதுச்சேரி, அக்.10

ஸ்ரீராம் இலக்கியக் கழகம், தமிழகம் மற்றும் புதுவையில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்காக நடத்திய திருக்குறள் பேச்சுப் போட்டி இறுதிச் சுற்றில் புதுச்சேரி மண்டலத்தில் பங்கேற்ற சிதம்பரம், ஷெம்ஃபோர்ட் ஃபியூச்சரிஸ்டிக் பள்ளியைச் சேர்ந்த பா. வர்ஷா, மேல்நிலைப் பிரிவில் முதல் பரிசை வென்று சாதனை படைத்துள்ளார்.

ஸ்ரீராம் இலக்கியக் கழகம், 'இடைநிலைப் பிரிவு (68 ஆம் வகுப்பு)', 'மேல்நிலைப் பிரிவு (912 வகுப்பு)', 'கல்லூரிப் பிரிவு' என மூன்று பிரிவுகளில் திருக்குறள் பேச்சுப்போட்டியை 1988 ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் மாநில அளவில் நடத்தி வருகிறது. இதில் நடப்பாண்டில் மொத்தம் 5620 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை, வேலூர், தாம்பரம், புதுச்சேரி, சேலம், திருச்சி, நெல்லை, மதுரை, தஞ்சாவூர், திருவாரூர், கோவை மற்றும் ஈரோடு ஆகிய 12 மண்டலங்களில் கால் இறுதி மற்றும் அரை இறுதிச் சுற்றுகள், கடந்த ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் நடைபெற்றன. இவற்றிற்கான இறுதிச் சுற்று அண்மையில் சென்னையில் நடைபெற்றது. அரை இறுதிச் சுற்றில் வெற்றி பெற்ற 36 போட்டியாளர்கள் (இடைநிலை, மேல்நிலை, கல்லூரி என ஒவ்வொரு பிரிவிலும் 12 மையங்களில் இருந்து தலா ஒருவர் வீதம் 12 வெற்றியாளர்கள்) இறுதிச் சுற்றில் பங்கேற்றனர்.




இதில் மாநில அளவில் பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றோரின் விவரம் வருமாறு:

இடைநிலைப் பிரிவு:

- முதல் பரிசு: அ. மஞ்சுஸ்ரீ, வெங்கிடசாமி நாயுடு நடுநிலைப் பள்ளி, இடையன்குளம், விருதுநகர் (மதுரை மையம்)
- இரண்டாம் பரிசு: க. ஹரிசரண், வேலம்மாள் வித்யாலயா, வானகரம், சென்னை (சென்னை மையம்)
- மூன்றாம் பரிசு: பி. கார்நிஷ், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மூலத்துறை (கோவை மையம்)

மேல்நிலைப் பிரிவு:

- முதல் பரிசு: பா. வர்ஷா, ஷெம்ஃபோர்ட் ஃபியூச்சரிஸ்டிக் பள்ளி, சிதம்பரம் (புதுச்சேரி மையம்)
- இரண்டாம் பரிசு: ப. யாழினி, சேது பாஸ்கரா நிறைநிலை மேல்நிலைப் பள்ளி, புதூர், அம்பத்தூர், சென்னை (சென்னை மையம்)
- மூன்றாம் பரிசு: கீ. சீ. பனிமலர் பாரதி, மேக்ஸ்வெல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர் (தஞ்சாவூர் மையம்)

கல்லூரிப் பிரிவு:

- முதல் பரிசு: மு. சந்தோஷ்குமார், ஏ. இ. எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கிருஷ்ணகிரி (வேலூர் மையம்)
- இரண்டாம் பரிசு: சி. அஸ்வின் அண்ணாமலை, பண்ணாரி அம்மன் தொழில்நுட்பக் கல்லூரி, சத்தியமங்கலம், ஈரோடு (கோவை மையம்)
- மூன்றாம் பரிசு: க. ஸ்ரீநிதி, அ. வ. அ. கல்லூரி (தன்னாட்சி), மன்னம்பந்தல், மயிலாடுதுறை (திருவாரூர் மையம்)

முதல் பரிசு வென்றோருக்கு தலா ரூ. 15,000 ரொக்கமும், இரண்டாம் பரிசை தட்டிச் சென்றோருக்கு தலா ரூ. 10,000 ரொக்கமும், மூன்றாம் பரிசாக தலா ரூ. 7,500 ரொக்கமும் மற்றும் அனைவருக்கும் கோப்பையும், சான்றிதழும் வழங்கப்பட்டன.



கிருஷ்ணகிரி பட்டுவளர்ச்சி துறை உதவி இயக்குனர் (வித்தகம்) அலுவலகத்தில் பட்டுமுட்டைகள் உற்பத்தி விற்பனை, விதைக்கூடுகள் கொள்முதல், பராமரிப்பு உள்ளிட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன்மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஏஞ்சலின் பொன்ராணி, பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குனர்கள் தங்கபாண்டி, ஆனிப்பிரின்ஸி (விரிவாக்கம்) உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# கோவை மாவட்ட அனைத்து ஊராட்சி ஒன்றிய ஒப்பந்ததாரர்கள் நலச்சங்கம் கலந்தாய்வு கூட்டம்




கோவை அக்:10

கோவை இரயில் நிலையம் அருகே உள்ள தனியார் அரங்கில் நடைப்பெற்ற இக்கூட்டத்தில் தீர்மானமாக ரூ.10 லட்சம் கீழுள்ள தொகைக்கான டெண்டர் பணிகளை ஆன்லைன் டெண்டர் முறையிலிருந்து மாற்றி இதற்கு முன்பு இருந்த நடைமுறையை பின்பற்ற வேண்டும் எனவும்,அதே போல் Vendor MGNREGS பணிகள் முடிவுற்றும் பல வருடங்களாக நிலுவையிலுள்ள தொகையை சம்மந்தப்பட்ட முறையில் பணி செய்தமைக்கு கட்டுமான பொருட்களுக்கான நிலுவைத் தொகையினை வழங்க வேண்டும் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள்,ஊராட்சிகளில் பிடித்தம் செய்யப்பட்ட E.M.D., A.S.D., W.H.A. ஆகியவைகளை ஆடிட்டர் தணிக்கை செய்யப்பட்டதும் வழங்கப்பட வேண்டும் எனவும்,மேலும் பிடித்தம் செய்யப்பட்ட வருமானவரி,G.S.T ஆகியவை அந்தந்த மாதங்களில் உடனடியாக செலுத்த வேண்டும் எனவும் இதுசம்மந்தப்பட்ட தனி அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் மற்றும் திட்ட இயக்குநர் குறிப்பாணை வழங்க வேண்டும்.202627ம் ஆண்டிற்கான கட்டுமான பொருட்களின் விலை பட்டியல் அறிக்கை வழங்கப்பட வேண்டும் என ஒப்பந்ததாரர்கள் சங்கம் கேட்டுக்கொள்கிறது.இதில் ஏராளமனோர் கலந்து கொண்டனர்.

# சேலத்தில் புதிய போலீஸ் கமிஷனர் விசாரணை
## சிமெண்ட் மீடியனை அகற்றி தகரத்தில் அமைத்து வருவது ஏன்?

சேலம். அக்.10–

சேலம் மாநகரில் போக்குவரத்து நெரிசலை சீர் செய்யும் பணியில் போக்குவரத்து பிரிவு அதிகாரிகள் தீவிரமாக பணியாற்றி வருகின்றனர்.

பொதுமக்களின் ஸ்பான்சர் மூலமாக தடுப்பு கட்டைகள், சென்டர் மீடியன்கள் ஆகியவை போடப்பட்டு வருகிறது. புதியதாக பெரிய நிறுவனங்களின் உதவியுடன் சிக்னல்கள் அமைக்கப்பட்டும் வருகிறது. தற்போது மாநகரில் சென்டர் மீடியன்கள் அமைக்கும் பணி நடந்து வருகிறது. பெரிய விபத்து ஏற்படும் சாலைகளை கண்டறிந்து அதில் சென்டர் மீடியன் போடுவது வழக்கம். ஆனால் தனியார் நிதி உதவியுடன் தகரத்தில் சென்டர் மீடியன் அமைக்கப்பட்டு வருகிறது. தேவையில்லாத இடங்களில் கூட தற்போது இந்த தகரத்தினால் ஆன சென்டர் மீடியன்கள் போடப்பட்டு வருவதாக புகார் எழுந்துள்ளது.

சேலம் முள்ளுவாடி கேட் மேம்பாலத்திலும் தகரத்திலான சென்டர் மீடியன் அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக டிரில்லிங் மிஷின் மூலமாக துளையிட்டு அதன் மூலமாக சென்டர் மீடியன் அமைக்கப்பட்டுள்ளது. இது அந்த மேம்பாலத்திற்கே ஆபத்தை ஏற்படுத்தும் என கூறப்படுகிறது. சிமெண்டாலான சென்டர் மீடியன்கள் நெடுஞ்சாலைத்துறை சார்பில் மாநகரம் முழுவதும் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ளது. இது பெரிய பாதுகாப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆனால் தற்போது தகர சென்டர் மீடியன் தேவையில்லாத இடங்களில் கூட அமைக்கப்பட்டு வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

திருச்சி மெயின் ரோட்டில் போடப்பட்டிருந்த சிமெண்டாலான சென்டர் மீடியனை அகற்றிவிட்டு தகரத்திலான சென்டர் மீடியனை போட்டுள்ளனர். இதற்கான காரணம் என்ன என்பது தெரியவில்லை. இந்நிலையில் காந்தி ரோட்டில் இருந்து வின்சென்ட் வரையுள்ள சிமெண்டாலான சென்டர் மீடியனை இரவோடு இரவாக அகற்றி வருகின்றனர். இதுபொதுமக்களிடையே பல்வேறு சந்தேகங்களை எழுப்புகிறது. எந்தவித பாதிப்பும் ஏற்படாத சென்டர் மீடியனை அகற்றுவது ஏன்?, இவ்வாறு அகற்றும் சென்டர் மீடியனை எங்கே கொண்டு செல்கிறார்கள் என்ற கேள்வியும் எழுந்துள்ளது. இதனை கண்காணிக்கும் போக்குவரத்து பிரிவு அமைதி காத்து வருகிறது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதுபற்றி பொதுமக்கள் கூறுகையில், சென்டர் மீடியன் இல்லாத இடங்களில் சென்டர் மீடியன் அமைப்பது வரவேற்புக்குரியது. ஆனால் உறுதியாக இருக்கும் சிமெண்டாலான சென்டர் மீடியனை அப்புறப்படுத்துவது ஆச்சரியமாக உள்ளது. இதுபற்றி உயர் அதிகாரிகள் விசாரணை நடத்த வேண்டும். எந்த நிறுவனத்தின் மூலம் சென்டர் மீடியனை அமைத்து வருகின்றனர் என்ற தகவலை தெரிவிக்க வேண்டும், என்றனர். இதுதொடர்பாக புதியதாக பொறுப்பேற்றுள்ள மாநகர போலீஸ் கமிஷனர் பாபுவிடமும் மக்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவரும் விசாரணை நடத்தி வருகிறார்.



ஈரோடு மாவட்டம் சென்னிமலை புதுப்பாளையத்தில் விவாச யபயனாளி தனது தோட்டத்தில் அரசு மானியத்துடன் அமைக்கப்பட்ட நிரந்தர காய்கறி பந்தலை மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# இந்திய தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை கண்டித்து டெல்லியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ராகுல் காந்தியை கைது செய்ததை கண்டித்து ஒருங்கிணைந்த மாவட்ட காங்கிரஸ் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

திருவள்ளூர் அக் 10 :

இந்திய தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை கண்டித்து டெல்லியில் ராகுல் காந்தி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்ற போது அவரை கைது செய்த டெல்லி காவல்துறையை கண்டித்து ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்ட காங்கிரஸ் சார்பில் பெரியகுப்பத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வடக்கு மாவட்ட தலைவர் ஆர்.சசிகுமார் தலைமை தாங்கினார் . முன்னாள் எம்எல்ஏ., துரை சந்திரசேகர் முன்னிலை வகித்தார்.



இந்த ஆர்பாட்டத்தின் போது ராகுல் காந்தியை கைது செய்த டெல்லி காவல்துறையை கண்டித்தும், கண்டித்தும் பிஜேபி அரசைக் கண்டித்தும் முழக்கங்கள் எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில துணைத்தலைவர் ஏகாட்டூர் ஆனந்தன், மாநில செயலாளர்கள் அருணாச்சலம், தன்ராஜ், தீனா, ஓபிசி பிரிவின் செயல் தலைவர் ஜே. கே. வெங்கடேஷ், மாநில இளைஞர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் திவாகர், மாவட்ட துணைத்தலைவர் எம். கே. மணவாளன், லோகநாதன், சண்முகம், சரஸ்வதி, ராமன், மாவட்ட சிறுபான்மை துறை தலைவர் கலீல் ரகுமான் மாவட்ட விளையாட்டு துறை தலைவர் பிரேம்குமார் வட்டார தலைவர்கள் சதீஷ், குப்பன், மாதையன், ஜாகிர் உசேன் மற்றும் தாஸ், சுதாகர், செல்வகுமார், செந்தில், அன்பு, ராஜேஷ், மதன், குப்பன், லலிதா, இளையராஜா, நாகராஜ், சூரி மற்றும் பல காங்கிரஸ் நிர்வாகிகள் கலந்து கொண்டு மத்திய பிஜேபி அரசுக்கு எதிராகவும், டெல்லி காவல்துறையை கண்டித்தும் முழக்கங்களை எழுப்பினர்.

# ஜார்க்கண்ட் முதல்வரின் தாயார் மறைவு: திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை: அக்.10

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட எக்ஸ்தள பதிவு: ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன் தாயார் ரூபி சோரன் மறைவெய்திய செய்தியறிந்து மிகுந்த வருத்தமுற்றேன்.

இத்துயர்மிகு வேளையில் ஹேமந்த் சோரன் மற்றும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். மறைந்த ரூபி சோரன் நினைவுகளை நெஞ்சில் ஏந்தி இதனைக் கடக்கும் மனவலிமையையும் இளைப்பாறுதலையும் அவர்கள் பெற விழைகிறேன்.

இவ்வாறு எக்ஸ்தளத்தில் பதிவிட்டுள்ளார்

# ராயக்கோட்டை அருகே கருவில் குழந்தையின் பாலினத்தைக் கண்டறிந்த வழக்கில் இருவர் குண்டர் சட்டத்தில் கைது!

கிருஷ்ணகிரி அக்.10–

கிருஷ்ணகிரி மாவட்டம், ராயக்கோட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட எம்.ஏ. கல்யாண மண்டபம் அருகே, கடந்த 12.09.2026 அன்று சட்டவிரோதமாக அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் இயந்திரத்தைப் பயன்படுத்தி கருவில் உள்ள குழந்தையின் பாலினத்தைக் கண்டறியும் வகையில் ஸ்கேன் செய்ததாக, கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், கே.மோட்டூர் கிராமத்தைச் சேர்ந்த எஸ்தர் (32), தனசேகரன் மனைவி மற்றும் திருப்பத்தூர் மாவட்டம், சிவராஜ்பேட்டையைச் சேர்ந்த குருமூர்த்தி (35), தம்பிதுரை மகன் ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனை தலைமை மருத்துவ அலுவலர் டாக்டர் கிரிஜா அளித்த புகாரின் பேரில், ராயக்கோட்டை காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, இருவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர்.

இந்நிலையில், கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பரிந்துரையின் பேரில், மாவட்ட ஆட்சியர் உத்தரவுப்படி, 08.10.2026 அன்று இருவரும் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். இதையடுத்து, குருமூர்த்தி வேலூர் மத்திய சிறையிலும், எஸ்தர் வேலூர் பெண்கள் சிறையிலும் அடைக்கப்பட்டனர்.

# அரசு கல்லூரியில் வாக்காளர் சேர்க்கை விழிப்புணர்வு




அறந்தாங்கி. அக்.10

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோயில் அருகே பெருநாவலூரில் இயங்கி வரும் அறந்தாங்கி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் புதிய வாக்காளர் சேர்க்கை குறித்த விழிப்புணர்வு நிகழ்வு, கல்லூரித் திருவள்ளுவர் அரங்கத்தில் நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் முனைவர் ரா.சரளா தலைமை தாங்கினார்.

அறந்தாங்கி வருவாய்க் கோட்டாட்சியரும், அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பதிவு அலுவலருமான இ.அபிநயா சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, புதிய வாக்களாருக்குரிய தகுதிகள், வயது வரம்பு, படிவம்6 இன் அவசியம், புதிய வாக்காளர் சேர்க்கை முகாம்கள் நடைபெறும் நாட்கள் குறித்த விளக்கங்களை எடுத்துக்கூறி மாணவர் களிடையே விழிப் புணர்வை ஏற்படுத்தியதோடு மாணவ, மாணவியர்களுக்கு படிவம் எண் 6 ஐயும் வழங்கினார்.

அறந்தாங்கி வட்டாட்சியர் கவியரசன், புதுக்கோட்டை மாவட்ட மகளிர் அதிகாரமையத்தின் மாவட்ட திட்ட ஒருங்கிணைப் பாளர் சை.ஹசீனா பானு, கல்லூரிக் கண்காணிப் பாளர் பா.மகாராஜன் மற்றும் கல்லூரிப்பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் உடன் இருந்தனர்.

# சேலம் அரசு மருத்துவமனை ரத்தவங்கி சார்பில் 87 தன்னார்வ ரத்ததான முகாம்கள் நடத்த திட்டம்:மருத்துவர்கள் தகவல்.

சேலம். அக்.10–

சேலம் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளின் ரத்த வங்கி சார்பில், அடுத்தாண்டு மே மாதம் வரை 87 தன்னார்வ ரத்ததான முகாம் நடத்த திட்டமிடப் பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

தமிழ்நாடு ரத்த பரிமாற்று குழுமத்தின் கீழ், அரசு மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் ரத்த வங்கி செயல்பட்டு வருகிறது. இங்கு தன்னார்வலர்கள் மூலம் வழங்கப்படும் ரத்தம் மற்றும் ரத்தத்தின் கூறுகள் தானமாக பெறப்பட்டு, பாதுகாப்பான முறையில் சேமித்து வைக்கப்படுகிறது. பிரசவம், அறுவை சிகிச்சை உள்ளிட்ட அவசர சமயங்களில், தேவைப்படும் நோயாளிகளுக்கு, உடனடியாக ரத்தம் வழங்கி, உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

அரசு மருத்துவமனைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பிற ரத்த வங்கிகள் மூலம் கல்லூரிகள், தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட இடங்களில், தொடர்ச்சியாக ரத்த தான முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதில் ஏராளமானோர் கலந்து கொண்டு ஆர்வத்துடன் ரத்ததானம் வழங்கி வருகின்றனர். இதுகுறித்து மருத்துவர்கள் கூறியதாவது: தன்னார்வலர்களிடம் இருந்து சேகரிக்கப்படும் முழு ரத்தம், தேவைகளுக்கு ஏற்ப, ரத்த கூறுகளாகவும் பிரிக்கப்படு கிறது. ஒருவர் கொடுக்கும் ரத்தத்தில் இருந்து, பல நோயாளிகள் பயன் பெறுகின்றனர். பிரிக்கப்பட்ட சிகப்பு அணுக்கள் 35 முதல் 42 நாட்கள் வரையும், பிளாஸ்மா கூறுகள் ஒரு ஆண்டு வரையும், உரிய முறையில் சேமித்து வைத்து பாதுகாக்க முடியும். ரத்த தானம் என்பது பல உயிர்களை காப்பாற்றி வருகிறது.

சேலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் ரத்த வங்கி சார்பில். தொடர்ச்சியாக ரத்த தான முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, அக்டோபர் மாதத்தில் 5 முகாம்களும், நவம்பர் மாதத்தில் 18 முகாம்கள், டிசம்பர் மாதத்தில் 8 முகாம்கள், அடுத்தாண்டு ஜனவரி மாதத்தில் 7 முகாம்கள், பிப்ரவரி மாதத்தில் 4 முகாம்கள், மார்ச் 8 முகாம்கள், ஏப்ரல் மாதத்தில் 4 தன்னார்வ ரத்த தான முகாம்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேட்டூர் அரசு தலைமை மருத்துவமனையின் ரத்த வங்கி சார்பில், வரும் டிசம்பர் மாதம் முதல் அடுத்தாண்டு மே மாதம் வரை 13 முகாம்களும், ஆத்தூர் அரசு மருத்துவமனையின் ரத்த வங்கி சார்பில், அக்டோபர் முதல் அடுத்தாண்டு மே மாதம் வரை 20 ரத்த தான முகாம்களும் நடத்தப்பட உள்ளது.

சேலம் அரசு மருத்துவமனை, மேட்டூர் அரசு மருத்துவமனை, ஆத்தூர் அரசு மருத்துவமனையின் ரத்த வங்கி சார்பில் 87 தன்னார்வ ரத்ததான முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மக்கள் தொகையில் குறைந்த பட்சம் 1 சதவீத மக்களுக்கு தேவைப்படும் ரத்த யூனிட்டுகள் இருப்பை உறுதி செய்வதை இலக்காக கொண்டு, தன்னார்வ ரத்த தான முகாம்களை வலுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைவரும் ரத்த தானம் அளிக்கலாம்.

தமிழம் முழுவதும் கடந்த ஓராண்டில், அரசு மற்றும் தனியார் ரத்த வங்கிகள் மூலம் மொத்தம் 9.54 லட்சம் யூனிட் ரத்தம் பெறப்பட்டுள்ளது. தமிழகத்தின் இலக்கிற்கு மேல், அதாவது அரசு ரத்த வங்கிகள் மூலம் 4 லட்சத்து 51 ஆயிரத்து 324 யூனிட், தனியார் ரத்த வங்கிகள் மூலம் 5 லட்சத்து 2 ஆயிரத்து 314 யூனிட் ரத்தம் தானமாக பெறப்பட்டுள்ளது. தமிழகத்தில் மாநில இலக்கை விட 118 சதவீதம் எட்டியுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# திருவள்ளூரில் காசநோய் இல்லா தமிழ்நாட்டிற்கான, சுகாதாரத்திற்கான கூட்டு குழு தொடக்க பிரச்சார நிகழ்ச்சி : மாவட்ட ஆட்சியர் ச.கவிதா தொடங்கி வைத்தார்




திருவள்ளூர் அக் 10 :

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பல்நோக்கு கூட்டரங்கில் திருவள்ளூர் மாவட்ட தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டம் சார்பாக, காசநோய் இல்லா தமிழ் நாட்டிற்கான, சுகாதாரத்திற் கான கூட்டு குழு தொடக்க பிரச்சார நிகழ்வை மாவட்ட ஆட்சியர் ச.கவிதா நேரலையில் பார்வையிட்டு, குத்து விளக்கேற்றி நிகழ்ச்சியினை தொடங்கி வைத்து, காசநோய் விழிப்புணர்வு உறுதி மொழியினை அனைவரும் ஏற்றுக் கொண்டு, காசநோய் விழிப்புணர்வு தகவல் கையேட்டினை பணியாளர் களிடம் வழங்கி, சுகாதாரத்திற் கான கூட்டு குழுவினர் மற்றும் காசநோய் இல்லா ஊராட்சி செயலாளர்களிடம் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி, என்டிஇசிஎல் சார்பில் சமூக பங்களிப்பு நிதி திட்டத்தில் (சிஎஸ்ஆர்) ரூ.8 இலட்சத் திற்கான வரையோலையினை மாவட்ட ஆட்சியர் பெற்றுக் கொண்டு, சுகாதாரத்துறையின் காசநோய் பிரிவு மருத்துவர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். பின்னர் மாவட்ட ஆட்சியர் கூறியதாவது :

தேசிய காசநோய் ஒழிப்பு திட்டம் நமது திருவள்ளூர் மாவட்டத்தில் காசநோய் இல்லா தமிழ்நாடு 2030 என்ற இலக்கினை நோக்கி பல்வேறு செயல் திட்டங்கள் மூலமாக முன்னெடுத்து செயல்பட்டு வருகிறது. நமது மாவட்டத்தில் 14 வட்டார சுகாதார நிலையங்கள், 9 அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு மற்றும் தனியார் மருத்துவக்கல்லூரிகளில் காசநோய் கண்டுபிடிப்பு பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைகள் என காசநோய்க்கான அனைத்து சேவைகளும் முழுமையாகவும் சிறப்பாகவும் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

காசநோய் இல்லா இந்தியா இயக்கத்தின் ஒரு பகுதியாக சுகாதாரத்திற்கான கூட்டு குழு எனப்படும் காசநோய் இல்லா இந்தியா குழுக்கள் 14 வட்டார அளவில் அமைக்கப் பட்டுள்ளன. இக்குழுக்கள் நியமிக்கப்பட்ட முதல் வகுப்பு அதிகாரிகளின் தலைமையில், MY Bharat தன்னார்வலர்கள் மற்றும் தேசிய மாணவர் படை ஆதரவுடன் செயல்படுத்தப் படும் என்று மாவட்ட ஆட்சியர் கூறினார்.

இதில் திருவள்ளூர் சார் ஆட்சியர் எஸ்.பிரசாந்த், திருவள்ளூர் அரசு மருத்துவ கல்லூரி (ம) மருத்துவமனை முதல்வர் ஜி.பாலாஜி, இணை இயக்குனர் (குடும்ப நலம் (ம) ஊரக நலப்பணிகள்) ஜி. எழிலரசி, துணை இயக்குனர் (குடும்ப நலம்) என். பொற்செல்வி, துணை இயக்குநர் (காசநோய்) பி. சங்கீதா, தேசிய மாணவர் படை (மருத்துவ பிரிவு), சென்னை மேஜர்.மு.ரோஹித் கிருஷ்ண குமார், மாவட்ட இளைஞர் நல அலுவலர், ஆர். ஸ்ரீ ஆதித்ய சந்திரம், செவிலியர் பயிற்சி பள்ளி மாணவர்கள், தனியார் தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ரூ.22.50 லட்சம் மோசடி செய்ததாக ஊழியர் மீது புகார் கலெக்டரிடம் நிறுவன உரிமையாளர் மனு



கோவை அக்:10

கோவை வேடப்பட்டி பகுதியைச் சேர்ந்த சிட்டி டிரேடர்ஸ் நிறுவன உரிமையாளர் கணேஷ்குமார், தனது நிறுவனத்தில் மேலாளராக பணியாற்றிய வருண்குமார் என்பவர் நிறுவனப் பணத்தை முறைகேடாக கையாண்டதுடன், தனிப்பட்ட முறையிலும் பணம் பெற்றுக்கொண்டு மோசடி செய்ததாகக் கூறி மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு அளித்துள்ளார்.

அந்த மனுவில்,கடந்த 2025ம் ஆண்டு செப் மாதம் முதல் வருண் குமார் தனது நிறுவனத்தில் மேலாளராக பணி யாற்றி வந்ததாகவும் மாதம் ரூ.45 ஆயிரம் சம்பளம் வழங்கப்பட்ட தாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நிறுவனத்தின் வரவுசெலவு கணக்குகளை கையாளும் போது,நிறுவனத்திற்கு தெரியாமல் சுமார் ரூ.60 லட்சம் வரையிலான பணப்பரிவர்த்தனைகளை தனது வங்கி கணக்கு மூலம் மேற் கொண்ட தாகவும்,அதில் சுமார் ரூ.18 லட்சம் வரை நிறுவனத் திற்கு இழப்பு ஏற்பட்ட தாகவும் புகாரில் தெரிவித் துள்ளார்.

மேலும்,கடந்த 2025ம் ஆண்டு நவ 11ம் தேதி தனது சொந்த தேவைக்காக பணம் தேவைப்படுவதாக வருண்குமார் மற்றும் அவரது மனைவி உமாதேவி கேட்டுக் கொண்டதன் பேரில்,நம்பிக்கையின் அடிப்படையில் உமாதேவியின் வங்கி கணக்கிற்கு ரூ.4.50 லட்சம் அனுப்பியதாகவும் மனுவில் குறிப்பிட் டுள்ளார்.இதுதொடர்பாக வருண்குமார் மற்றும் உமாதேவி மீது கடந்த செப்டம்பர் 12ம் தேதி தொண்டாமுத்தூர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும், அது CSR No.0205/2026 ஆக பதிவு செய்யப்பட் டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தன் மீது பொய்யான புகார்களை அளித்து, ஊடகங்கள் மற்றும் சமூக வலைதளங்கள் மூலம் அவதூறு பரப்பப் படுவதாகவும் கணேஷ் குமார் குற்றம்சாட்டி யுள்ளார்.

எனவே,நிறுவனப் பணம் மற்றும் தனிப்பட்ட முறையில் பெற்றதாகக் கூறப்படும் தொகை என மொத்தம் ரூ.22.50 லட்சம் தொடர்பாக உரிய விசாரணை நடத்தி,வருண்குமார் மற்றும் உமாதேவி மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து பணத்தை மீட்டுத்தர வேண்டும் என மாவட்ட ஆட்சியரிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# சுற்றுலா வந்த இளைஞருக்கு நேர்ந்த சோகம்

சேலம் அக்:10

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியை சேர்ந்த தனியார் நிறுவன ஊழியரான நிரஞ்சன் குமார் 35 என்பவர் தனது நிறுவன ஊழியர்களுடன் லோகேஷ் குமார் தலைமையில் 14 பேர் கொண்ட குழுவினருடன் ஏற்காட்டை சுற்றி பார்க்க வேண்டி அவரது நண்பர்களுடன் 07.10.2026 தேதி காலை சுமார் 8மணிக்கு ஏற்காடு கிளியூரில் உள்ள பிரி villaவில் தங்கிஉள்ளனர் ஏற்காடு இடங்களை சுற்றிப் பார்த்து விட்டு. இரவு பிரி villa வில் தங்கி உள்ளனர் மறுநாள் காலை நிரஞ்சன் குமார் க்கு நெஞ்சு எரிச்சல் நெஞ்சு வலியாக உள்ளது என்று உடனிருந்த மோனிஷ் என்பவருக்கு சொல்லியுள்ளார்.

உடனே மோனிஷ் , பரத் என்பவர்கள் கார் மூலம் ஏற்காடு பஸ்டேண்ட் அருகில் உள்ள கதிர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர் பின்னர் மேல் சிகிச்சைக்காக ஏற்காடு அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர் ஆனால் நிரஞ்சன் குமார் ஏற்கனவே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அதனை தொடர்ந்து அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக ஏற்காடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.இது குறித்து ஏற்காடு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்



ஈரோடு மாவட்ட நிர்வாகம் மற்றும் தொல்லியல்துறையின் சார்பில் பெருந்துறை வட்டம், கொடுமணல் அகழாய்வுத்தளத்திற்கு நினைவுச்சின்னங்கள், தொல்லியல் த ளங்களைப் பாதுகாத்தல், பராமரிதல் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி தலைமையில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.




திண்டுக்கல் காமராஜர் பேருந்து நிலையத்தில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கான பேருந்தினை திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் சச்சிதானநதம், நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் இரா. அய்யனார் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். உடன் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (மதுரை லிமிடெட்) திண்டுக்கல் மண்டல பொது மேலாளர் முத்துகிருஷ்ணன் உட்பட போக்குவரத்துத்துறை அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளனர்.



விழுப்புரம் தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையத்தில் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்வதற்கான மீட்பு உபகரணங்கள் மூலம் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டதை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான்நேரில் பார்வையிட்டார். உடன் தீயணைப்புத்துறை மாவ்ட அலுவலர் குமார், உதவி மாவட்ட அலுவலர் ஜெய்சங்கர் துணை ஆட்சியர் ஹரிஷ் உட்பட பலர் உள்ளனர்.

# குரூப்4 தேர்வு: காலிப்பணியிடங்களின் எண்ணிக்கையை உயர்த்த தமிழக அரசுக்கு எஸ்டிபிஐ கட்சி வலியுறுத்தல்!

சென்னை: அக்.10–

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) வெளியிட்டுள்ள குரூப்4 தேர்வு அறிவிப்பில், மிகக் குறைந்த அளவிலான பணியிடங்களே சேர்க்கப்பட்டிருப்பது லட்சக்கணக்கான அரசுப் பணி தேர்வர் களிடையே பெரும் ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளதாக எஸ்டிபிஐ கட்சியின் மாநில செயல் தலைவர் அச.மர் பாரூக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: கிராம நிர்வாக அலுவலர், இளநிலை உதவியாளர், வரித் தண்டர், வரி வசூலிப்போர், தட்டச்சர், உதவியாளர், சுருக் கெழுத்து தட்டச்சர் உள்ளிட்ட தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளுக்குத் தேவையான 46 வகையான பணிகளுக்காக, குரூப்4 போட்டித் தேர்வின் மூலம் வெறும் 6,574 பேர் தேர்ந்தெடுக் கப்படுவர் என டிஎன் பிஎஸ்சி அறிவித்துள்ளது.

தமிழ்நாடு அரசுத் துறைகளில் சுமார் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட குரூப்4 பணியிடங்கள் காலியாக இருப்பதாகக் கூறப்படும் சூழலில், நடப்பாண்டில் (2026) இவ்வளவு குறைந்த எண்ணிக்கையிலான காலிப்பணியிடங்களை மட்டுமே நிரப்ப அரசு முன்வந்திருப்பது, இரவு பகலாக படித்து அரசுப் பணிக்காகக் காத் திருக்கும் லட்சக்கணக் கான இளைஞர்களின் நம்பிக்கையில் கல்லைத் தூக்கிப் போடும் செயலாகும்.

தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளில் ஒட்டுமொத்தமாக 6 லட்சத்துக்கும் அதிக மான பணியிடங்கள் காலியாக இருப்பதாக அரசு ஊழியர் சங்க அமைப்புகள் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றன. இத்தகைய சூழலில், அரசு வெளியிட்டுள்ள இந்த குறைந்தபட்ச அறிவிப்பானது "யானைப் பசிக்கு சோளப் பொரி" போட்ட கதையாகவே அமைந்துள்ளது. ரசுத் துறைகளில் உள்ள காலிப்பணியிடங்கள் விரைந்து நிரப்பப் படாததால், தற்போது பணியில் இருக்கும் அரசு ஊழியர்களுக்குப் பணிச்சுமை அதிகரிப்பதோடு, பொதுமக்களுக்கான அரசுச் சேவைகளும் காலதாமதமாகும் நிலை உருவாகிறது.

எனவே, அரசுப் பணி தேர்வர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, குறைந்தபட்சம் குரூப்4 பிரிவில் உள்ள மொத்த காலிப்பணியிடங்களில் 10 முதல் 15 சதவீதம் வரையிலான இடங்களையாவது உடனடியாக நிரப்பக்கூடிய வகையில், அறிவிக்கப்பட்டுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கையை உயர்த்த தமிழ்நாடு அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என எஸ்டிபிஐ கட்சி சார்பில் கேட்டுக்கொள்கிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

# அதிமுக எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா வழக்கு: தலைமை நீதிபதி விடுப்பு காரணமாக தீர்ப்பு வரும் 12ம் தேதிக்கு தள்ளிவைப்பு!

சென்னை: 6 அதிமுக எம்.எல்.ஏ.க்களின் ராஜினாமா கடிதத்தை ஏற்ற சபாநாயகரின் முடிவுக்கு எதிரான வழக்கில், தலைமை நீதிபதி விடுப்பில் உள்ளதால் இன்று தீர்ப்பு வழங்கப்படவில்லை; அதிமுக கொறடா அக்ரி கிருஷ்ணமூர்த்தி தொடர்ந்த இவ்வழக்கு நேற்று தீர்ப்புக்காக பட்டியலிடப்பட்டிருந்த நிலையில்,வரும் 12ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421, 9750589992